# மே – 02 – வியாழன்

## “தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்”-திபா145:18

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 5 : 27 – 33

அந்நாட்களில் காவலர்கள் திருத்தூதர்களை அழைத்துக்கொண்டு வந்து அவர்களை யூதத்தலைமைச் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள். தலைமைக் குரு அவர்களை நோக்கி, ”நீங்கள் இந்த இயேசு பற்றிக் கற்பிக்கக்கூடாது என்று நாங்கள் கண்டிப்பாய்க் கட்டளையிடவில்லையா? என்றாலும் எருசலேம் முழுவதும் நீங்கள் கற்பித்து வருகிறீர்கள். மேலும் இந்த மனிதருடைய இரத்தப் பழியையும் எங்கள்மீது சுமத்தப் பார்க்கிறீர்களே!” என்றார். அதற்குப் பேதுருவும் திருத்தூதரும் மறுமொழியாக, ”மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்?நீங்கள் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்ற இயேசுவை நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இஸ்ரயேல் மக்களுக்கு மனம் மாற்றத்தையும் பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலப்பக்கத்துக்கு உயர்த்தினார். இவற்றுக்கு நாங்களும் கடவுள் தமக்குக் கீழ்ப்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள்” என்றனர். இவற்றைக் கேட்ட தலைமைச் சங்கத்தார் கொதித்தெழுந்து, திருத்தூதர்களைக் கொல்லத் திட்டமிட்டனர்.

**பதில்பாடல் :** ஏழை கூவியழைத்தான் ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்.

### நற்செய்தி : யோவான் 3 : 31 – 36

அக்காலத்தில் இயேசு நிக்கோதேமிடம் கூறியது : மேலிருந்து வருபவர், அனைவரையும்விட மேலானவர். மண்ணுலகிலிருந்து உண்டானவர் மண்ணுலகைச் சேர்ந்தவர். மண்ணுலகு சார்ந்தவை பற்றியே அவர் பேசுகிறார். விண்ணுலகிலிருந்து வருபவர், அனைவருக்கும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் பற்றியே அவர் சான்று பகர்கிறார். எனினும் அவர் தரும் சான்றை எவரும் ஏற்றுக்கொள்வதில்லை.அவர் தரும் சான்றை ஏற்றுக் கொள்பவர் கடவுள் உண்மையானவர் என்பதை உறுதிப் படுத்துகிறார். கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார். கடவுள் அவருக்குத் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றிக் கொடுக்கிறார்.தந்தை மகன் மேல் அன்பு கூர்ந்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார். மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வைப் பெறுவர். நம்பிக்கை கொள்ளாதோர் வாழ்வைக் காணமாட்டார். மாறாகக் கடவுளின் சினம் அவர்கள்மேல் வந்து சேரும்” என்றார்.

**தியானம்:** அடுத்தவரை அதிகாரத்தோடு அடக்க நினைத்தவர்களது வாழ்வு எவ்வாறு அழிகிறதென வரலாறு கூறுகிறது. இறைகட்டளைக்கு மனிதன் கட்டுப்படாவிடின் எப்படியாகும் என்பதனை நற்செய்தி கூறுகிறது. எமது பரலோக தகப்பன் மீதும், இயேசு ஆண்டவர் மீதும் நம்பிக்கைவைக்காது வாழ்வோர் மீது கடவுளின் சினம் வந்து சேரும். நிபந்தனையற்ற விதத்தினில் எம்மை அன்புசெய்யும் இறைவனை மறந்து சாத்தானோடு சேர்ந்து வாழும் எமது தோழமைக்கு எதிராக இறைவன் தமது சினத்தை வெளிப்படுத்துவது நியாயமானதே. இன்றைய முதல்வாசகத்தில் கிறிஸ்துவின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட திருச்சீடர்கள் “மனித அதிகாரத்திற்குக் கட்டுப்படாது கடவுளுக்கே கட்டுப்படுவோம்” எனச் செயல்படுவதனை அவதானிக்கலாம். பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்ட திருச்சீடர்கள் கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளை எடுத்துச் சொல்கின்றார்கள். கிறிஸ்துவின் ஆற்றலால் பசாசுகளையும் அடக்குகிறார்கள். ஆதலால், எமது செயல்கள் பரிசுத்த ஆவியானவரது தூண்டுதலுக்கு அமைவாக, பரிசுத்த ஆவியானவர் கற்றுத் தருவதற்கமையவே, நாம் இறைமகன் கிறிஸ்து இயேசுவை ஆண்டவர் என அறிக்கை செய்யவேண்டும். இறைமகன் கிறிஸ்து இயேசுவின் உத்தான மகிமையைக் கொண்டாடும் எமதுள்ளத்தில் மனித உணர்வுகளால் இறைபிரசன்னத்தை உணர முடியாத தடைகளில் இருந்து வெளிவருவோம். நாம் பாவி என உணர்ந்து இறைவனது மன்னிப்பைப் பெறுவதற்குப் பரிகாரம் செய்வோம். இறை பிரசன்னத்தை நாடாது, பாவ வாழ்க்கைக்குள்ளே மூழ்கி இருப்போமாயின், நாம் ஆண்டவரது சினத்திற்கு ஆளாவோம் என்பது உண்மை. இறுதிக்காலம் இது என உணர்ந்து செயற்படுவோம். ஏனெனில், ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப்பார்க்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். “உண்மையாய்த் தம்மைநோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்” என்றவரிகளின் அர்த்தத்தினை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம்.